புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 29. TML1168 - நீதி இலக்கியங்களில் நிகரில்லாப் பெண்

முனைவர் கமலா.கோ,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, தூயநெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர், 635601.

**முன்னுரை:**

அறஇலக்கியம் என்பது தமிழ் இலக்கியத்தின் முக்கியமான பிரிவொன்று. இதில் மனிதனின் வாழ்வு, மனம், அறம், மற்றும் சரியான நடத்தை பற்றிய கருத்துகள் முக்கியமான இடத்தைப் பிடிக்கின்றன. மனித இனத்தில் ஆண் பெண் என்ற இருபாலரும் இருப்பினும், ஆண்களே சமூகத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். பெண்ணின் வாழ்க்கை அவரின் சமூக நிலை மற்றும் அவரின் கடமைகள் பற்றிய கவனம் செலுத்துகிறது. இவ்விலக்கியத்தில் பெண் என்பவர் பொதுவாக அறத்தில் வாழும் மற்றும் சமூகத்திற்குத் தகுதியானவராக மையப்படுத்தப்படுகிறார். இதுவே பெண்ணின் வாழ்க்கையின் மையம், மறுசீரமைப்பு மற்றும் உயர்வு என்பதாகும். பொதுவாக சமூகம், குடும்பம் மற்றும் தனிமை ஆகியவற்றை சமநிலைப்படுத்துவதில் பெரிதும் வலியுறுத்தப்படுகின்றனர்.

பெண்ணின் உணர்வுகள், அவளுடைய வாழ்வு மற்றும் அவளின் பங்கு முக்கிய இடம்பெறுகின்றது. தமிழ்ச்சமுதாயத்தில் ஆண் பெண் வேறுபாடு இன்று நேற்று தொடங்கியதில்லை. தொல்காப்பியர் காலம் தொட்டே நிலவி வருகின்றது எனலாம். இதனை நிலைநாட்டும் வண்ணம் தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் தமிழச்சிக்கும், தமிழனுக்கும் இலக்கணம் வகுத்துள்ளதை,

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்குரிய"

– என்றும்,

"பெருமையும் அறிவும் ஆடூஉ மேனே" என்று குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியம் மட்டுமல்லாது சங்க இலக்கியம், நீதி இலக்கியம், பக்தி இலக்கியம், இக்கால இலக்கியம் என அனைத்து இலக்கியமும் பெண்ணைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. அவை பெண்ணைப்பற்றிப் பல பொருண்மைகளில் எடுத்துரைக்கின்றன.

**அறஇலக்கியமும் பெண் வெளிப்பாடும்:**

நீதிஇலக்கியத்தில் கூறப்படுகின்ற கற்பு, காவல், கணவன்வழிபாடு ஆகியன கட்டுப்பாடுகளும் பெண்ணின் செயல்பாட்டை அவளது கணவனை மட்டும் சார்ந்திருக்க வேண்டும் என்ற நிலை இருந்தாலும், பெண்களைப் பொறுப்பான இடத்திலேதான் அதிகம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இல்லறத்தை நல்லறமாகப் போற்றுபவர், இல்லத்திற்கு இன்றியமையாதவர்கள், கணவனைத் தெய்வத்திற்கு மேலாக உயிரைவிட மேலாகப் போற்றுபவர், மென்மையுடையவர்கள், உடமைப்பொருள், குடும்பத்தில் விருந்தோம்பல் பண்புடையவர்கள், கற்புடையவர்கள் என்று பெண்களைப் போற்றிப் புகழ்ந்து பேசுகின்றது. இந்நிலையில் திருக்குறள் முதலான அறஇலக்கியம் பெண்களின் வெளிப்பாடு அமைந்தமுறையினைக் கணக்கிடுவது நம் கடமையாகும்.

**இல்லாளின் நல்லறம்:**

இல்லறம் நல்லறமாக விளங்கவேண்டும் என்றால், இல்லத்தலைவி கொண்டிருக்கும் நற்பண்புகளைப் பொறுத்தமையும். ஏனெனில், தலைவியானவள் விருந்தோம்பல், குடும்பத்தின் நிர்வாகமுறை, கணவன், குழந்தைகள் மற்றும் சுற்றத்தினர் போன்ற அனைத்திலும் தன்னுடைய முழுப்பங்கினையும் செலுத்துவதன் மூலம் வெளிப்படுகிறது.

நல்லதுணைவி இல்லற வாழ்வில் அடிப்படை ஆதாரம். பெண்களின் தூய்மை, நல்லொழுக்கம், பெருந்தன்மை ஆகியவை குடும்ப வாழ்விற்கு மிகவும் அவசியம். பெண் தனக்குச் சிறந்த தொழில் கணவன்

*வாழ்வை வழி நடத்தல் என்று கூறி அவர்களின் சமூகப் பங்கு குறிப்பிடப்பட்டுள்ளதை,*

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (குறள்–45)

*ஒருவன் தன் துணைவிமேல் கொண்டுள்ள அன்பினையும், பிறர்க்குப் பகுத்துண்டல் ஆகிய அறத்தினையுடையவருக்கு, அவனது வாழ்வானது பண்பாகவும் பயனாகவும் அமையும் என்று திருவள்ளுவர் பெண்ணிற்கு முதன்மைச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.*

*மனைக்குத் தேவையான அறப்பண்புளைப் பெற்றிருப்பதுதான் பெண்ணின் சிறப்பு. இல்லறத்திற்குத் தக்க நற்குணம், நற்செய்கையுடன் கணவன் வரவுக்குத் தக்க வாழ்க்கை நடத்துபவள் வாழ்க்கைத் துணை என்றும், இல்லறத்திற்குரிய நற்பண்பு மனைவியிடம் இல்லாமலிருந்தால், அந்த வாழ்க்கை சிறப்புடையதா யினும் பயனின்றிப் போகும்.*

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்" (குறள்–51)

*மனைவியின் நற்குணம் தான் ஒருவனின் வாழ்வில் சிறந்த ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. மனைவியாகப்பட்டவளின் அன்பு முழுவதும் தன் கணவனுக்காக என்றிருந்தால் பெய்யாத மழையும் பெய்யும் என்றும், கற்பையும் கணவனையும் தகுதியமைந்த புகழையும் காப்பாற்றுபவளே பெண் என்பதில் பெருமிதம் கொள்ளவேண்டும்.*

*வாழ்வில் எதுவும் நிலையில்லை என்பதனைப் பத்து மாசம் சுமந்து பெற்றெடுத்த தாயனவளே தன் பிள்ளையை விட்டுவிட்டுத் தன் தாய் சென்ற இடத்திற்குச் சென்றுவிடுகின்றாள் என்பதில் உலகில் உயர்ந்தது தாய் என்றதனை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இதனை நாலடியார்,*

"எனக்குத்தா யாகியா ளென்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்– தனக்குத்தா
யாகி யவளு மதுவானாவற் றாய்தாய்க்கொண்
டேகு மளித்திவ் வுலகு" (நாலடி– 15)

*என்று குறிப்பிடுவதன் வாயிலாகப் பெண்களைச் சிறப்பிற்குரியவராகச் சுட்டியுள்ளனர். அதோடு மட்டுமின்றி ஒரு பெண்ணிற்கு அழகு பிள்ளைப்பேறு அடைவது தான் என்பதனைத் திருவள்ளுவர்,*

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோரெ னக்கேட்ட தாய்" (குறள்– 69)

*குழந்தைகளைப் பெற்றெடுப்பதுதான் தாயின் கடமை என்றும், சிறப்பென்றும் கொள்ளப்படுகின்றது. இன்றைய சூழலில் மணமாகியபின் சமூகம் கேட்கப்படும் முதல் கேள்வி விசேசமா என்பதுதான். இன்றைய சமூகத்தினர் பொருளாதாரத்தின் காரணாமாகப் பிள்ளைப்பேறுவைத் தள்ளிப்போடுவதுதான் பெரும் வருத்தத்திற்குரிதயதாக உள்ளது. அது அவர்களின் குடும்பச் சூழல்தான் காரணம் என்று நகர்ந்து செல்ல வேண்டும்.*

**இல்லாளின் இன்சொல்:**

*இல்லத் தலைவியானவள் நாள்தோறும் இனிய சொற்களை மட்டும் பேச வேண்டும், கேட்க வேண்டும் என்பதுதான் நல்லறம். இவ்வாறாகப் பெண்ணானவள் பேசும் நல்வார்த்தைகள் அனைத்துமே சுற்றத்தவரின் நன்மைக்காக மட்டுமே. இனிய சொற்களால் தான், அகத்திலிருந்து புறத்திற்குச் செல்லும் கணவன் உட்பட அனைவரும் சென்ற காரியம் வெற்றியடைய வேண்டும் என்பதை மையப்படுத்தி அமையும். இனியவை நாற்பது,*

"முத்தேர் முறுவலார் சொல்லினிது" (இனியவை நாற்பது–01)

*முத்துப்போன்ற பெண்களின் இனிய சொற்களைக் கேட்பது நாம் பெற்ற வரம். மனைவியும் கணவனும் அன்போடு வாழ்தல், உள்ளம் ஒன்றுபட்டுக் கூடி வாழ்கின்ற வாழ்க்கை தான் உலகில் சிறந்த ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. இனிய சொற்களைக் கேட்டு வாழ்ந்தால், வாழ்வில் உயர்வான இடத்தைப் பெறமுடியும். மிகுதியான மகிழ்ச்சி அன்புக்காதலியின் இன்சொல்லில் தான் என்று,*

"கல்லில் பிறக்கும் கதிர்மணி காதலி
சொல்லில் பிறக்கும்" (நான்மணி –6)

*கூறுவதன் வழி, இனிய சொற்கள் கேட்பது பெண்ணிடம் மட்டுமே. ஏனென்றால் பெண்மை மென்மையானது என்று இதுவரை வந்த பெரும்பாண்மையான படைப்புகள் குறிப்பிடுகின்றன.*

**பெண்ணிற்கு அழகு:**

*பெண்களின் அழகு என்றால் அவர்களின் வெளிப்புறத் தோற்றம் மட்டுமே நமக்கு நினைவிற்கு வரும். அதனை மட்டுமே கவிஞர்கள் முதலாக காதலர்கள் வரை வார்த்தைகளாலும், வர்ணனைகளாலும் செம்மைப்படுத்துகின்றனர். ஆனால் பெண்களின் சிறப்பான குணம் என்னவென்றால், தனக்குரியவர்களை அன்பாகவும், அக்கறையாகவும், பண்புடையவர்களாகவும், பாசமுடையவர்களாகவும் வைத்துக் கொள்ளும் திறம் பெண்களுக்கே உரியது. அந்த வகையில்,*

“பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருத்தல்”

“குலமகட்கு அழகுதன் கொழுநனைப் பேணுதல்”

“உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்” (வெற்றி–11.12.13)

*பெண்கள் மகளாகவும், காதலியாகவும், மனைவியாகவும், தாயாகவும், செவிலித்தாயாகவும் சிறந்து விளங்கியுள்ளனர் என்பது பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்கும் உயர்ந்த பண்பாகும். ஆனால் இன்றைய சூழலில் இத்தனை பொறுப்புகளை மட்டுமல்லாது, அனைத்துத் துறைகளிலும் அதிகாரிகளாகத் தடம்பதித்து விருதுகளைப் பெற்றுக் குவித்துக் கொண்டுள்ளனர். எனவே, பெண்கள் பெருமிதம் கொள்ள வேண்டும்.*

**முடிவுரை:**

*பெண் என்பவரை அறஇலக்கியத்தில் உயர்வாகவும், அறநெறி தவறாதவராகவும், பொறுப்புடையவராகவும், இல்லறப்பாங்கு உடையவளாகவும் பெரும்பாண்மையான இடங்களில் சுட்டியிருப்பது வாழ்வில் அறநெறி தவறாமல், அனைவரும் நன்னடத்தை கொண்டவர்களாக விளங்க வேண்டும் என்பதற்கிணங்க படைக்கப்பட்டுள்ளது.*

*பெண் என்பவள் மென்மை, கற்பு, அழகு முதலியவற்றில் சிறந்து விளங்கியுள்ளனர். பெரும்பாலான இடங்களில் ஆண்சமூகத்தினை முன் வைத்து எழுதப்பட்டிருந்தாலும் கூட, பெண்களின் ஒழுக்க நெறிகளையும், பண்பும், மாண்பும் சிறப்பாகப் போற்றக்கூடியதனை இனம் காண முடிகிறது.*